# பொதுக்காலம் 13 ஆம் வாரம்

## திருவழிபாடு ஆண்டு B

**இன்றைய வாசகங்கள்:**

சாலமோனின் ஞான நூலிலிருந்து வாசகம். 1: 13-15, 2: 23-24,

பதிலுரைப்பாடல்: திபா. 30: 1, 3-5, 10-12,

திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய

இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம்: 8:7,9, 13-15,

மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்: 5: 21-43)

## திருப்பலி முன்னுரை:

நம்பிக்கைக்குரியவர்களே,

பொதுக்காலத்தின் பதிமூன்றாம் ஞாயிறு திருப்பலியை கொண்டாட உங்களை அன்புடன் அழைக்கிறோம். இறைவனில் நம்பிக்கை கொண்டு வாழ்வைப் பெற்றுக்கொள்ள இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. பன்னிரு ஆண்டுகளாக இரத்தப் போக்கால் அவதியுற்ற பெண்ணின் நம்பிக்கை அவளுக்கு நலமளித்தது. தொழுகைக் கூடத் தலைவரின் நம்பிக்கை அவரது மகளுக்கு உயிரளித்தது. நாமும் கடவுள் மீது முழுமையான நம்பிக்கை கொண்டோராய் வாழும்போது அற்புதங்களைக் காண்போம். நமது நம்பிக்கை நமக்கும், பிறருக்கும் வாழ்வளிக்கும் வகையில் அமைய வரம் வேண்டி, இத்திருப்பலியில் பங்கேற்போம்.

விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

1. நம்பிக்கை தருபவராம் இறைவா,

உமது திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், தங்கள் நம்பிக்கையால் நீர் அளிக்கும் வாழ்வைப் பெற்றுக்கொள்ளவும், திருச்சபையின் மக்கள் அனைவரும் வாழ்வுபெறச் செய்யவும் அருள்புரிய வேண்டு மென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. வாழ்வை வழங்குபவராம் இறைவா,

உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் உம் மீது முழுமையாக நம்பிக்கை கொண்டு வாழவும், தங்கள் நம்பிக்கையால் உமக்கு சான்று பகர்ந்து பிறரும் நிலைவாழ்வைக் கண்டடைய உதவவும் துணைபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. முதியோர்களுக்காக :

அன்பின் இறைவா! உம் மக்கள் இன்றைய சூழலில் வயது முதிர்ந்தவர்களை பேணி காக்கும் நிலைமாறி, முதியோர் இல்லங்கள் பெறுகிவரும் நிலையில் அவர்களுக்கு நீர் தந்தையாகவும், தாயாகவும் நின்று, தாங்கள் கடந்து வந்த பாதையைக் குறித்து அவர்கள் துன்புறும் வேளையில் அவர்களுக்கு அன்பினை பொழிந்து அரவணைத்தும் நல் ஆயனாக இருந்து வழி நடத்திட வரம் வேண்டி இறைவா உமை மன்றாடுகிறோம்.

4. நலம் அளிப்பவராம் இறைவா,

பணம், பதவி, புகழ் போன்ற ஆசைகளில் வாழும் மனிதர்கள் அனைவருக்கும், தங்களிடம் மிகுதியாக இருப்பதைப் பிறரோடு பகிர்ந்து வாழும் நல்ல உள்ளத்தை அளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

5. உயிரைச் சாவினின்று காக்கின்ற தந்தையே இறைவா!

நோய், விரக்தி, சிறைவாழ்வு, வதைமுகாம் இவற்றுள் நின்று மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கும் அனைவரை யும் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

6. அனைவருக்கும் மீட்பராகிய எம் இறைவா!

எங்கள் பங்கிலுள்ள இளையோர் அனைவரையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். அவர்களின் வாழ்வு ஒளிமயமானதாய் இருக்கவும், அவர்கள் தேர்ந்தெடுக்கும் படிப்பிலும், ஒழுக்கத்திலும் தலைசிறந்து விளங்கவும், உமது உயிருள்ள சாட்சிகளாய் இவ்வுலகில் வலம் வர இறைமகன் இயேசுவின் வழியாக இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.